# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

---

*[1990, மாச்சு மாதம் 06 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---


1990, மார்சு மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : ரூபா 1.00

**1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை(திருத்தச்) சட்டம்**

[1990, மார்ச்சு மாதம் 06 ஆம் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. —ஓ 63/89

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. நானூற்றுமுப்பத்துமூன்றும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 433 அ என்னும் பிரிவெனப் பயனுறுதலும் வேண்டும் :— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 433அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் விடயமான சொத்தின் ஆட்சிப் பொறுப்பு

433அ. (1) வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு விடப்பட்ட ஒரு வாகனத்தின் விடயத்தில், (204 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அத்தகைய வாகனத்தின் பூரண சொந்தக்காரராக பதிவு செய்யப்பட்டுள்ள ஆள் இந்த அத்தியாயத்தின் நோக்கத்திற்காக அத்தகைய வாகனத்தின் ஆட்சிப் பொறுப்பாளராகக் கருதப்படல் வேண்டும்.

(2) ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வாகனத்தின் ஆட்சிப் பொறுப்பாளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், காலத்தைப் பொறுத்தமட்டில் அத்தகைய வாகனத்தின் பேரில் அவ்வாறு முதலில் பதிவு செய்யப்பட்ட ஆள் இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய வாகனத்தின் ஆட்சிப் பொறுப்பாளராகக் கருதப்படல் வேண்டும்.".

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.